1897 ம் ஆண்டு (ஏவிளம்பி வருடம்) திரு. கதிரவேலு - சின்னையர், சண்முகம் சுப்பிரமணியர், சபாபதி சிவசிவாபிள்ளை என்போர் மக்களிடம் பிடி அரிசி, தேங்காய் சேகரித்து கோவிலுக்கு நிதி சேர்த்தனர். கோவிலில் மானம்பூத் திருவிழா கிரமமாகச்செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து குதிரை வாகனம் ஒன்றினையும் செய்வித்தனர்.

சக்கடத்தார் ஆறுமுகம், நடராஜ விக்கிரகமொன்றைத் தாபித்து வைத்தார்.

நொத்தாரிசு தில்லைநாதரும் அவரின் சகோதரர்கள் மருமக்களும் பல காணிகளையும் வயல்களையும் கோவிலுக்குத் தர்மசாதனம் செய்தனர்.

நாவற்குழியிலும் சில காணிகள் தர்மசாதனமாக கோவிலுக்கு வழங்கப்பட்டன. கோவிலுக்கு மிக ஆர்வத்துடன் தொண்டு புரிந்த திரு. சுப்பிரமணியர் பிலவ வருடம் (1901 ம் ஆண்டு) சிவபதமடைந்தனர். அக்காலம் இவர் மேற்சொல்லப்பட்ட சரமகவியிலிருந்து இவர் ஆற்றிய தொண்டுகளை அறியக் கூடியதாயிருக்கிறது. அவை பின்வருமாறு-:

''கோல வைசியர் குலத்து தித்த
சாலு நற்குணச் சண் முகத்தவனும்
நன்னியாச்சியா நாம நல்லாளும்
முன்னர்ப் பன்னாள் செய்தவத்தால்
வந்தவதரித்த சுந்தர மைந்தன்
அந்தமிலா நல் விளக்கனையான்
இட்ட சீர்த் தியாகராயமணியன்
பாட்டனெனவே பகர்ந்திடு பார்த்திபன்
கந்தையராசன் கழலுறு டாக்குத்தர் தன்
சிந்தை மகிழும் சிறிய தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமும், பொறையும், தயவு, நன்னிறைவு
மாய்ந்த நல்லறிவு மருளுமிக்க
சுந்தர புருடனெனவே புகழ் பெற்றோன்.
இல்லற நல்லற மென்றினி துணர்ந்தே
எல்லவரும் புகழ் ராசவுத்தியோக
ஞன சக்கிடுத்தார் ஆறுமுகேந்திரன்
மாணினி வள்ளியம்மை பெயர் மனையாள்
மகிழ்ந்துதவ வந்திடு தங்கக்
கனகாம்பிகை யெனும் கற்பகக் கொடியை
கடிமணம் புரிந்து கனசுகபோகம்
படிமிசையே யனுபவித்து வாழ்ந்திருந்தோன்.
மானுடப் பிறப்பால் வருபயன் தெரியிற்
றனமர் தந்தியின்றாள் வணங்கிடலெனவே
காதலியுடனே கனதவ மிருந்து
அந்தி சந்தி விநாயகனடி தொழுது
தேவாலயத்தில் திருத்தொண்டர் பெரிய
பாவார் புராணப் படனமு மியற்றி
யறுபத்து மூவர் குருபூசையும் செய்து
மறுவறுத்தான பலதர் மங்கள் வழங்கி
மன்னிய மகாமண்டப முடனே
துன்னரு கூவல், சுமைதாங்கி, தொட்டி
கதலி தெங்கு கமுகு கோட்ட
நன்மலர் நந்தாவன மமைத்துச்
சபாநாயகரைத் தாபிப்பதற்கு ஒரு
சபா மண்டபம் அமைக்கத் தகு பொருளீந்தோன்
இன்னன திருப்பணிகள் யாவையுஞ் செய்தே
மின்னிகர் வாழ்வை வெறுத்து
பொன்னடிக் கமலம் பூண்டு தாமரையிற்
றண்ணீர் போல் தளர்ந்து சோர்ந்து
பொன்னுலகத் தேவர் பூமழை பொழிய
மகிபன் கந்தவேள் மைத்துனன்றனே
தகனச் சடங்குகள் தகு முறையியற்றக்
களிபெறு முள்ளங் கசிந்தினி துருக
வருடம் பிலவமாசி யெண்மூன்றி
லுலாபுகர் வாரமோண நாள்
அபரபக்கத் துவாதசியில்
பேர்பெறு நல்ல சுப்பிரமணிய ராசன்
சீர்பெறு குமிழியினிலையிலா வாழ்வை நீத்து
திட்பமதான சிவலோகந்தனில்
பெட்புறு முமையாள் பெண்ணொருபாக
னட்புறு மரனடி சார்ந்தனனே.,,

மேற்கூறப்பட்ட சரமகவியிலிருந்து இக்கோவிலில் எத்தகைய பற்றுள்ளவராக சுப்பிரமணியர் சேவை புரிந்தாரென்பதை நாம் அறியக்கூடியதாயிருக்கிறது.

இவ் ஆலயசபை மீண்டும் 1910ம் ஆண்டில் கூடி ஐயாத்துரை பொன்னுச்சாமி (உடையார்) சம்பந்தர் மாணிக்கவாசகர், வெற்றிவேலு பொன்னம்பலம் என்போரைத் தர்மகர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்களாக தெரிவு செய்தனர். இவர்கள் ஆலயத்தின் நிருத்தமண்டபம், தம்பமண்டபம் வாகனசாலை, என்பவற்றைக் கட்டி முடித்தனர். அசையாமணி ஒன்றை திரு. சிற்றம்பலம் உபகரித்தார். 1920ம் ஆண்டில் தர்மகர்த்தா மாணிக்கவாசகர் காலமானதும். திரு. ஐயாத்துரை பொன்னுச்சாமி உடையார் 1944ம் ஆண்டு வரை இக்கோவில் மனேஜராகவிருந்து நவராத்திரிப் பூஜைகள், திருவெம்பாவைப் பூஜைகள், முதலியனவற்றைச் சிறப்பாக நடைபெறச்செய்தனர். இவர் 35 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

இதன் பின்னர் 1945ம் ஆண்டில் கோவிலில் மகாசபை திரு. க. திருஞானசம்பந்தர் விதானையார் தலைமையில் கூடி திரு. இராசையா சோமசுந்தரம் (உடையார்) திரு. கந்தையா கனகசபை (கிளாக்கர்) திரு. மாணிக்கவாசகர் சம்பந்தர் என்போரைத் தர்மகர்த்தாக்களாகத் தெரிவு செய்தனர். இவர்கள் திருக்கோவிலின் தூபியை முற்றாக அகற்றி வெள்ளைச் சீமேந்தால் நவீன சிற்பங்களை அமைத்து அழகுமிக்க தூபியைத் தாபித்தனர். இதனையொட்டி மிகவும் ஆடம்பரமாக 1948ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தின் தெற்கு வாசல் மண்டபம், வாகனங்கள், அர்ச்சகரின் வீடு முதலியவற்றை இவர்கள் செய்து முடித்தனர்.

பல்வேறு திருத்த வேலைகளும், புனரமைப்பு வேலைகளும், இவர்கள் காலத்தில் நடைபெற்றன. அர்ச்சகருக்கு வீடு கட்டிக் கொடுத்ததே பெரும் பணியாகும்.

கொழும்புத்துறை ஜனசமூக நிலயத்தைக் கட்டுவதற்கும் இவர்கள் கோவிற் காணியை குத்தகையாக வழங்கினர். ஜனசமூக நிலையம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1979ம் ஆண்டில் மிகவும் சிறப்பாக கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

ஆலய மகாசபையின் தலைவராக இருந்த டாக்டர் ச. அ. வெற்றிவேலு, தர்மகர்த்தாக்களுக்கு உறுதுணையாயிருந்து, அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி, உதவிகள் பலபுரிந்தனர். செயல் திறன் மிக்க செயலாளராகத் திரு ச. மா. சிவப்பிரகாசம் அவர்கள் இக் காலத்தில் ஆற்றிய தொண்டு மறக்கற்பாலது. மூன்று தர்ம கர்த்தாக்களும் 35 ஆண்டுகளுக்குமேல் ஆலயத்துக்கு சேவை புரிந்துள்ளனர்.

மூன்று தர்மகர்த்தாக்களும் சிவபதமடைந்து விட்டதால் மகாசபை கூட்டி தற்போது 21பேர் கொண்ட நிர்வாகசபையைத் தேர்ந்தெடுத்து அந்த நிர்வாகசபையே ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது. நிர்வாகசபை ஆலயத்தை நிர்வகிப்பதற்கு ஓர் யாப்பையும் வகுத்துள்ளது.

விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுக நம்வெவ்வினையை வேரறுக்க வல்ல இலந்தை நகர் விநாயகன் ஆரோகணித்திருக்கும் திருக்கோவில் தற்போது புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்குகின்றது.

அண்மையில் மிகச் சிறப்பாக பஞ்சகுண்டங்கள் வைத்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்று இவ்வருடம் வைகாசி மாதத்தில் மகோற்சவம் மிகவும் மங்களகரமாக நிறைவெய்தியுள்ளது.

''முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே—மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்''

(பரிபாலன சபையின் முன்னாள் செயலாளர்
திரு. க. இராஜசிங்கம் அவர்களால் தொகுக்கப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கொழும்புத்துறை மன்றுளாடும் வதரிபீட விநாயகர் ஆலயம்

## மஹோற்சவ உபயகாரர்கள்

| | பகல் | | இரவு |
|---|---|---|---|
| 1ம் திருவிழா | திரு. க. கந்தசாமி (கொடியேற்றம்) | — | திரு. மு. கணேசசுந்தரம் |
| 2ம் ,, | திரு. பொ. கனகரத்தினம் | — | திரு. செ. செல்வநாயகம் |
| 3ம், ,, | திருமதி அ. சீவரத்தினம் | — | திரு. செ. கந்தசாமி |
| 4ம் ,, | திருமதி ந. பாலேந்திரா | — | திரு. சி. சிவநாதன் |
| 5ம் ,, | திரு. சோ. சிவபாலசிங்கம் | — | திரு. மு. கனகசபை |
| 6ம் ,, | திருமதி கு. தணிகாசலம் | — | திருமதி கண்மணி - குழந்தைவேலு |
| 7ம் ,, | திரு. து. சிவகுருநாதன் | — | திரு. இ. பரராசசிங்கம் |
| 8ம் ,, | திரு. ச. திருநாவுக்கரசு குடும்பம் | — | டாக்டர் ப. விக்கினேஸ்வரன் (சப்பரம்) |
| 9ம் ,, | திரு. க. இராஜசிங்கம் குடும்பம் (தேர்) | — | திருமதி க. வைத்தியநாதன் |
| 10ம் ,, | திரு. பொ. சிவப்பிரகாசமும் சகோதரர்களும் (தீர்த்தம்) | — | திருமதி கந்தையா குடும்பம் |
| 11ம் ,, | பூங்காவனம் | — | திருமதி கணேஸ்வரி சேவியர் |
| 12ம் நாள் ,, | திருமதி. அரவிந்தா லோகேஸ்வரன் (பிராயச்சித்த அபிடேகம்) | — | திரு. க. சிவானந்தன் குடும்பம் (வைரவர் மடை) |

---

உ

## விசேட திருப்பணிகள் 1988 — 1989

1. திருமதி பாக்கியம் சண்முகநாதன் - தெற்கு மண்டபத்தின் ஒருபகுதி
2. திரு. செல்லத்துரை செல்வநாயகம் - நவக்கிரக கோயில்
3. செல்வன் துவாரகன் செந்திநாதன் ,, தெய்வகுமரன் இராஜசிங்கம் } சண்டேசுரர் கோவில்
4. திரு க. கந்தசாமி (மாஸ்ரர்) திருமதி மாணிக்கவல்லி வீரசிங்கம் } கொடித்தம்பம் செப்பில் செய்து சில்வர் பிளேற்றிங் செய்தது
5. திரு. து. நவரத்தினம் - தண்ணீர் இறைப்பதற்கு மோட்டர் பூட்டி குழாய் நீர் வழங்கியமை
6. திருமதி. கனகேஸ்வரி- இராஜலிங்கம் - புதிதாக வயறிங் செய்து மண்டபத்துக்கு மின் இணைப்புகள் பொருத்தியமை.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை மன்றுளாடும் வதரிபீட விநாயகர் ஆலயத்தில் கடமையாற்றிய நிர்வாகிகள்

# (1860ம் ஆண்டு தொடக்கம் 1989ம் ஆண்டு வரை)

## தர்மகர்த்தாக்கள்

1860ம் ஆண்டு

1. திரு. தில்லையம்பலம் குமாரசுவாமி (கணக்கர்)
2. திரு. கந்தர் ஆறுமுகம் (சக்கிடுத்தார்)
3. திரு. ஆரியர் தில்லைநாதர் (நொத்தாரிசு)

1910ம் ஆண்டு

1. திரு. ஐயாத்துரை பொன்னுச்சாமி (உடையார்)
2. திரு. சம்பந்தர் மாணிக்கவாசகர்
3. திரு. வெற்றிவேலு பொன்னம்பலம் (சட்டம்பியார்)

1945ம் ஆண்டு

1. திரு. கந்தையா கனகசபை (கிளாக்கர்)
2. திரு. இராசையா சோமசுந்தரம் (உடையார்)
3. திரு. மாணிக்கவாசகர் சம்பந்தர்

## தலைவர்கள்:

1. திரு. க. திருஞானசம்பந்தர் (விதானையார்)
2. திரு. C. K. சுவாமிநாதன் (தலைமை ஆசிரியர்)
3. திரு. C. T குமாரசாமி (சட்டத்தரணி)
4. டாக்டர் ச. அ. வெற்றிவேலு
5. திரு. க. திருஞானசம்பந்தர் (காணி அதிகாரி)
6. திரு. ச. செல்வராசா (சட்டத்தரணி)

## செயலாளர்கள்:

1. திரு. சம்பந்தர் திருநாவுக்கரசு
2. திரு. கனகரத்தினம் இராஜலிங்கம்
3. திரு. பொன்னுச்சாமி சண்முகநாதன் (Acting)
4. திரு. சுப்பையா சண்முகநாதன்
5. திரு. மாணிக்கவாசகர் சிவப்பிரகாசம்
6. திரு. சோமசுந்தரம் லோகேஸ்வரன் (Acting)
7. திரு. தியாகராசா பாலசுப்பிரமணியம்
8. திரு கணபதிப்பிள்ளை கந்தசாமி (மாஸ்ரர்)

## பொருளாளர்கள்:

1. திரு. இ. பொன்னையபலம்
2. திரு. P. K. பொன்னம்பலம்
3. திரு. கு. இராமநாதன் (இலங்கை வங்கி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சகரிடம் கையளிக்கப்பட்ட

# அன்பளிப்பு 1980 - 1989

| | | |
|---|---|---|
| 5-3-80 | ❊ திருமதி. கணேஸ்வரி திருஞானசோதி | ... 1 அம்மன் பொட்டு |
| 13-9-80 | திரு. க. கந்தசாமி மாஸ்டர் அவர்கள் முயற்சியால் | ... 1 சகடை |
| 13-12-80 | ,, து. சிவகுருநாதன் | ... 1 மூஷிக வாகனம் |
| 17-4-81 | ,, சு. பாலசிங்கம் | ... 1 பட்டுக்குடை |
| 3-8-81 | ❊ செல்வி சோ. சந்திராம்பாள் | ... 1 அம்மன் பொட்டு |
| 2-9-81 | மலேரியா தடுப்பு இயக்கம் (அமரர் சிவப்பிரகாசம் ஞாபகார்த்தமாக) | ... 1 பட்டுக் குடை |
| 11-10-81 | திரு. கு. இராமநாதன் | ... 1 கமலவிளக்கு |
| 20-12-81 | திருமதி கணேஸ்வரி திருஞானசோதி | ... 1 அம்மன் கொண்டை தூக்கணம் |
| 21-6 82 | திரு. கா. நாகமணி | ... 1 ரியூப்லைற் |
| 8-7-83 | ,, இரத்தினசபாபதி குணரத்தினம் | ... 1 பட்டுக்குடை |
| 16-10-83 | ,, பொ. லோகநாதன் குடும்பம் | ... 1 சுவர் மணிக்கூடு (பழுதாகிவிட்டது) |
| 25-11-83 | ❊ ,, மூர்த்தி ஐயர் குடும்பம் | ... 1 அம்மன் பொட்டு |
| 5-12-83 | ,, ந. திடவீரசிங்கம் | ... 1 சுவர்க்கடிகாரம் |
| 6-1-84 | திருமதி சந்திராம்பாள் பாலசுப்பிரமணியம் | ... 1 பித்தளைப் பஞ்சாலாத்தி |
| 23-2-84 | திரு. சரவணமுத்து இராஜகுலேந்திரன் | ... 1 சோடி பித்தளை குத்துவிளங்கு |
| 27-5-84 | திரு. இராஜசிங்கம் தெய்வமனோகரன் | ... 1 பெரிய சில்வர் குடம் |
| 10-6-84 | திருமதி சிவயோகம் கதிர்காமநாதன் | ... 1 சிறு விபூதி மடல் |
| 4-7-84 | திரு. கு. குருநாதபிள்ளை | ... 1 அபிடேக மேசை |
| 18-7-84 | ,, லோகநாதன் | ... 1 தூண்டாமணி விளக்கு |
| 19-9-84 | திரு. தீர்த்தங்கரன் | 1 பஞ்சாலாத்தி |
| 17-10-84 | ❊ திருமதி புவனேஸ்வரி யோகசுந்தரம் | ... 1 அம்மன் பொட்டு |
| 12-4-85 | திருமதி தெய்வேந்திரம் மகேஸ்வரி | ... 1 பஞ்சாலாத்தி |
| 30-4-85 | திரு. த. இராசேந்திரம் | ... 1 செப்பு குடம் |
| 10-5-85 | செல்வி சங்கீதா பாலசுப்பிரமணியம் | ... 1 பஞ்சாலாத்தி |
| 21-5-85 | ❊ ,, சிவயோகி நவரத்தினம் | ... 1 ஜிப்சி வளையம் |
| 23-5-85 | திரு. சோ. வரதராசசர்மா | ... 1 பிள்ளையார் வெள்ளிமுடி |
| 12-7-85 | திருமதி இராச பாலாம்பிகை சந்திரசேகரம் | ... 1 விபூதி மடல், சிறு கரண்டி |
| 21-10-85 | திருயோகசுந்தரம் சாந்தகுமார் | ... 1 பஞ்சாலாத்தி |
| 24-10-85 | திரு. ச. நாகேஸ்வரன் | ... 1 பிள்ளையார் திருவாசி |
| 4-4-86 | செல்வி உமா இராமநாதன் | ... 2 செப்பு பஞ்சபாத்திரம் 1 உருத்திரணி |
| 6-5-86 | ❊ தர்மினி கந்தசாமி | ... 1 அம்மன் பொட்டு |
| 8-5-86 | திரு. சரவணபவானந்தன் லோகநாதன் | ... 1 எவர் சில்வர் 1 சந்தனக்கும்பா |
| 20-7-86 | திருமதி மகேஸ்வரி எதிர்நாயகம் | ... 1 பித்தளைத் தட்டம் |
| 7-9-86 | திரு. குழந்தைவேல் நடராசா | ... 5 கொழுக்கி மணி 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 12-9-86 | திரு. அ. த ஜெயசிங்கம் | — 1 பஞ்சாலாத்தி |
| 23-9-76 | திருமதி இராசேஸ்வரி கணேசலிங்கம் | — 1 சிறு சில்வர் செம்பு |
| 2-2-87 | திரு. சண்முகநாதன் குடும்பம் | — 1 சில்வர் தட்டம் |
| 4-3-87 | ஸ்ரீ குமரன் ஸ்ரீ காந் | — 1 பஞ்சாலாத்தி |
| 13-3-87 | திரு. மகேந்திரன் ரவிச்சந்திரன் | — 1 பஞ்சாலாத்தி |
| 13-3-87 | ,, சின்னையா கலாராஜன் | ... 1 சில்வர் தட்டம் |
| 18-3-87 | செல்வன் ரகுராகவன் கணேசசுந்தரம் | ... 1 சில்வர் தட்டம் |
| 26-12-87 | திருமதி குமாரசூரியர் ரீச்சர் | ... 1 சில்வர் தட்டம் |
| ,, | திரு. L. நந்தகுமார் | ... 1 சில்வர் தட்டம் |
| 15-1-88 | விபுலானந்தர் பிறேமா | — 2 சில்வர் தட்டம் |
| ,, | திரு. பொ. சிவப்பிரகாசம் | ... 1 மரஉரல் |
| ,, | ,, ஞானசாபதி | ... 1 ஈயக்குடம் |
| 19-1-86 | திரு ந. நதலேஸ்வரன் | — 1 ஈயக்கிடாரம் |
| ,, | திரு குமாரசூரியர் பொன்னம்பலம் | ... 1 பாவித்த கிடாரம் |
| 27-4-88 | செல்வி உமா இராமநாதன் | ... 1 பித்தளைத்தட்டம் |
| 28-4-88 | செல்வன் பகீரதன் கணேசலிங்கம் | — 1 சில்வர் தட்டம், |
| ,, | திருமதி. பத்மாவதி இராமநாதன் | ... 1 மரத்தட்டம் |
| 2 3-4-88 | திரு கு நடராசா | — 1 சில்வர் தட்டம் |
| 2 6-5-88 | திருமதி இராசபாலாம்பிகை சந்திரசேகரம் | ... 2 சில்வர் கிண்ணம் 1 ஊதுபத்தி ஸ்ராண்ட் |
| 12-6-88 | செல்வி தயாளினி கணேசலிங்கம் | — 1 சிவன் வெள்ளிக்குறி |
| 14 7-88 | திருமதி தெய்வச்செல்வி சிவகுமார் | ... 1 அம்மன் பொட்டு |
| 16-7-88 | திரு. ச நாகேஸ்வரன் | ... 3 பித்தளைக்குடம் |
| 20-7-88 | ,, து. சிவகுருநாதன் | ... 1 பித்தளைச்சட்டி |
| ,, | ,, மு. கணேசசுந்தரம் | — 2 பித்தளைச்சட்டி சிறிது |
| ,, | செல்வி தெய்வமாலினி இராஜசிங்கம் | — 1 தாச்சிச்சட்டி |
| 20-7-88 | யோகர்சுவாமி மகளிர் ஆச்சிரமம் | — 1 சில்வர் தட்டம் |
| 22-12-88 | திரு. ஜெயசிங்கம் நந்தகுமார் | — 1 கற்பூரத்தட்டு |
| 25-12-88 | திருமதி ஞானாம்பிகை சிவப்பிரகாசம் | ... 2 சிறு சில்வர் சட்டி |
| 6-3-89 | செல்வன் சிவகணேஸ் சிவபாலசிங்கம் | — 1 இடபவாகனம் |
| ,, | திருமதி சரஸ்வதி இராசேந்திரம் | — 1 அன்னவாகனம் |
| ,, | திரு. கு. நடராசா | ... மின்இணைப்பு உபகரணங்கள் (தெற்கு மண்டபம்) |
| ,, | திருமதி கணேஸ்வரி சேவியர் | — மின் இணைப்பு உபகரணங்கள் |

## பிரதிஷ்டை

மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை என்பனவற்றில் வல்லவராய், விதிப்படி ஆசாரியத்துவம் பெற்றவராயுள்ள சிவச்சாரியார், லிங்கத்தையோ அன்றேல் பொன் முதலிய லோகங்களினால் செய்யப்பட்ட மூர்த்தியை விதிப்படி தாபித்தலாம். எங்கேயுமுள்ள மின்சாரத்தை வெளிப்படுத்த ஆங்காங்கே மின்சக்தி நிலையங்கள் இருப்பதைப்போல எங்குமுள்ள ஈஸ்வரசக்தியை வெளிப்படுத்த ஆங்காங்கே மந்திர பூர்வமாக ஆகம பூர்வமாக, ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கும்பாபிஷேகத்தின்போது யாகசாலையில் செய்யும் வேத மந்திரங்களின் மூலம் ஆயைத்திற்குரிய சத்தியைப் பெறுகிறோம். இறைவனை பஞ்சபூதங்களின் மூலம் சாந்நித்தியம் அடையச்செய்வதே கும்பாபிஷேகம் காட்டும் தத்துவப்பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பளிப்பு

1. திருமதி கந்தசாமி பரமேஸ்வரி — பென்ரனும் செயினும்
(பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது) (பெறுமதி 1420/-
2. திரு. செ. செல்வநாயகம் பித்தளை தூக்கு விளக்கு 3 சோடி
3. திரு. க. கந்தசாமி } மாஸ்ரர் கொடித்தம்பம்
திருமதி மா. வீரசிங்கம் ( சில்வர் பிளேற்றிங் செய்யப்பட்டது )
4. திரு. ந. குலேஸ்வரன் ... சில்வர் செம்பு
5. நவரத்தினம் சிவகுமார் — 1 அபிடேக கலசம்
(சுவாமியார் வீதி) ... 2 சில்வர் தூக்குச்சட்டி
... 2 காளாஞ்சி பிளேற்றட்
— 1 நாகதீபம் ,,
(1150 ரூபா பெறுமதி)
6. திருமதி இரத்தினசிங்கம் பத்மாசனி — 1 பித்தளை குத்துவிளக்கு (பெரியது)
7. செல்வி யசோதா சிவகுருநாதன் ... மரப்பீடமும் திருவாசியும்
8. திருமதி குணபூசணம் தணிகாசலம் ... 1 (சிகப்பு) பட்டுக்குடை
9. திரு. சிவதாஸ் சிவபாலசிங்கம் — 1 (பச்சை) பட்டுக்குடை
10. கோவில் நிர்வாகம் ... 1 அஸ்திரதேவர்
... 1 பலிபீடம் பீடமேசை
1 கைமணி
1 தம்பப்பிள்ளையார்
1 சண்டேஸ்வரர்
11. சபாரத்தினம் ஜெயபாஸ்கரன் ... 1 பஞ்சவர்ணப் பட்டுக்குடை
12. திரு. ச நாகேஸ்வரன்
திருமதி த. குணபூஷணம் } 1 பித்தளைசட்டி. பெறுமதி 300/-
திருமதி பா. நகுலேஸ்வரி

| | | பெறுமதி |
|---|---|---|
| 13. திருச்சிற்றம்பலம் பாலசுந்தரி | 1 பித்தளைச்சட்டி | 285-00 |
| (அவுஸ்திரேலியா) | 6 சிறு சில்வர் கிண்ணம் | 120-00 |
| | 2 சிறு சில்வர் தட்டம் | 110-00 |
| | | 515-00 |

14. திரு. சோ. நடராஜசர்மா 1 பஞ்சபாத்திரம் } பெறுமதி
1 உருத்திரணி ரூபா 950/-
5 சில்வர் தட்டம்
15. திரு. சோ. லோகேஸ்வரசர்மா 40 சில்வர் செம்புகள் பெறுமதி 4200/-
(யாகசாலைக்கு)
16. திருமதி மாணிக்கவல்லி வீரசிங்கம் பாவித்த ஆட்டுக்
கல்லும் குளவியும் 1
17. திருமதி பரிமளரத்தினம் திருநாவுக்கரசு 1 உண்டியல் பெட்டி
18. திரு. க. கந்தசாமி (மாஸ்ரர்) 1 திருவாசி
19. திருமதி. பூஷணம் தணிகாசலம் ... 1 வில்வமரம் (கொடிமரம்)
20. திருமதி அ. சீவரத்தினம் — 1 (மஞ்சள்) பட்டுக்குடை

❊ இந்த அடையாளமிடப்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுவிட்டன.

சோ. லோகேஸ்வரசர்மா
1 - 6 - 89 (அர்ச்சகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சகரிடம் பணமாகக் கையளிக்கப்பட்ட

## அன்பளிப்பு

| | | வரவு ரூ சதம் |
|---|---|---|
| 1. | திரு. நவரத்தினம் சிவகுமார் | 100-000 |
| 2. | ,, வைத்தியநாதன் வரதராசா | 100-00 |
| 3. | ,, பொ. பாலகுருநாதன் | 540-00 |
| 4. | ,, த. திடவீரசிங்கம் | 340-00 |
| 5. | திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை | 600-00 |
| 6. | திரு. பொ. கணேசநாதன் | 125.00 |
| 7. | ,, செல்லையா செல்வநாயகம் | 100-00 |
| 8. | திருமதி நடராசா (ரீச்சர்) | 340-00 |
| 9. | செல்வி வேலுப்பிள்ளை தனலட்சுமி | 570-00 |
| 10. | ,, வேலுப்பிள்ளை தனலட்சுமி | 100-00 |
| 11. | திருமதி ஜெகதா உமாகாந்தன் | 50-00 |
| 12. | ,, பாலேந்திரா நகுலேஸ்வரி | 110-00 |
| 13. | ,, பத்மாசனி இரத்தினசிங்கம் | 415-00 |
| 14. | ,, மாலா அருள்நேசன் | 50-00 |
| 15. | திரு. கணேசசர்மா கிருஷ்ணராஜசர்மா (மோதிரம் பவுண் 1 மஞ்சாடி குறைய) | 2900-00 |
| 16. | ,, சரவணபவசர்மா கிருபாகரன் | 277-75 |
| 17. | றஜனி நித்தியாநந்தன் | 300-00 |
| | | 7017-75 |

### விபூதி

வீபூதி சிவசின்னங்களில் ஒன்றாகும். சிவபக்தனான இராவணனின் மேனியை அலங்கரித்ததும் நீறாகும். இந்த நீற்றினை நாம் கால் பட சிந்துவது அபத்தம். நீற்றினை சிந்தினால் எமது செல்வமெல்லாம் அற்றுப்போகும். ''நீற்றினைச் சிந்தினை நின் திருவனைத்தும் சிந்தனை'

மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம்பிள்ளை

''கங்காளன் பூசும் கவசத்திரு நீற்றை
மங்காமற்பூச மகிழ்வரே யாமாகில்
தங்காவினைகளும் சாரும் சிவசத்தி
சிங்காரமான திருவடி சேர்வாரே''

(திருமந்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவு

| | | |
|---|---|---|
| திரு. ந. சிவகுமார் | எவர் சில்வர் தட்டம் | 100-00 |
| ,, பொ. பாலகுருநாதன்<br>,, வை. வரதராசா | 5 ரியூப்லைட்கள் | 659-60 |
| திருமதி நடராசா ரீச்சர் | சில்வர் சட்டி | 340-00 |
| செல்வி வே. தனலட்சுமி | மோதகச்சட்டி<br>பித்தளைச்சட்டி<br>தட்டுகள் | 570-00 |
| திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை | மோதகச்சட்டி (பெரியது) | 600-00 |
| | சில்வர் செம்பு 3 | 190-00 |
| | பூட்டு தெற்கு வாசல் | 75-00 |
| | பூட்டு 2 | 16-00 |
| | பூசைமணி 1 | 120-00 |
| | பிள்ளையார் அங்கி பிளேற் பண்ணின செலவு | 200-00 |
| | கெண்டி 1 | 300-00 |
| பிள்ளையார் சிவன் வைரவர் மேசை 1<br>8 நீளமான வாங்கு (நவராத்திரிக்கு) | | 3000-00 |
| சங்குபூசை பீடம் 1 | | 80-00 |
| ஏற்றியகூலி | | 70-00 |
| பெயின்ற் அரப்பேப்பர் | | 434-00 |
| 3 குடம் அடித்தகடு போட | | 150-00 |
| 2 சட்டி தட்டுப்போட்டு ஈயம் பூச | | 100-00 |
| 1 செம்பு | | 100-00 |
| 1 பூட்டுத் திருத்தியது | | 75-00 |
| | | 7179-60 |

செலவு – 7179-60
வரவு – 7017-75
மேலதிக செலவு – 161-85

சோ. லோகேஸ்வரசர்மா
(அர்ச்சகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த நிர்வாகிகளுக்கு அஞ்சலி

## திரு. ச. மா. சிவப்பிரகாசம் மறைவு (18-3-80)

மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபையின் செயலாளராக 1975ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டவர். 1966ம் ஆண்டு மேற்படி கோயில் புயல் காற்றால் சேதமடைந்தபோது ஓர் புனருத்தாரண சபையை நிறுவி அநுரதபுரத்திலும் பிற இடங்களிலும் நிதிசேகரித்து சேதமடைந்த மண்டபங்களையும் கூரைகளையும் திருத்தியமைத்து அர்த்தமண்டபம், மூடு சாந்து வேலை, களஞ்சிய அறையின் சுவர்களின் பூச்சு வேலை, குறைச்சுவர்களின் கட்டுவேலை களைச் செய்வித்து ஆலயத்தைப் புனரமைப்புச் செய்தார். 1979 ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடைபெறத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்தார். 1975ம் ஆண்டு வானம் பொய்த்ததால் வேளாண்மை குன்றியபோது நித்திய பூஜைகளைக் கிரமமாக நடைபெற வழிகளை வகுத்துக் கொடுத்தார். செயல் திறன் மிக்க செயலாளரெனத் தர்ம கர்த்தாக்களினதும் ஊர் மக்களினதும் பாராட்டுதலைப் பெற்றவர்.

## திரு. இ. சோமசுந்தரம் (உடையார்) மறைவு (24-3-1981)

1941ம் ஆண்டு முகாந்திரம் ஐ. பொன்னுசாமி உடையார் அவர்களால் அமைக்கப் பட்ட நிர்வாக சபையின் செயலாளராகக் கடமையாற்றி 1945ம் ஆண்டு மகாசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று தர்மகர்த்தாக்களுள் ஒருவராக விளங்கினார். 1954ம் ஆண்டில் மாநகரசபையுடன் சேர்ந்து சுவாமி வீதி வலம் வருவதற்காக ஒழுங்கையாகவிருந்த பழைய ஆரியர் வீதியை விசாலிக்கச் செய்தார். 1954ம் ஆண்டு அர்ச்சகருக்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்று மக்களிடம் நிதிசேகரிப்பதற்கு வேண்டுகோளைவிடுத்து வீட்டைக் கட்ட ஆரம்பித்தார். 1957ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி கோவில் அர்ச்சகராக விருந்த சோமசுந்தர ஐயர் சிவபதமடைந்தார். எனவே தற்காலிகமாக பூசைகள் நடைபெறுவதற்கு ஓர் குருக்களை ஒழுங்கு செய்து பிரம்மஸ்ரீ சோ. லோகேஸ்வரசர்மாவும் சேர்ந்து பூசைகள் கிரமமாக நடைபெற ஒழுங்குகளைச் செய்தார். அர்ச்சகரின் வீட்டையும் பெரும் கஷ்டப் பட்டு 1968ம் ஆண்டளவில் பூர்த்தி செய்வித்தார். 1945ம் ஆண்டு ஆலயம் சீர்குலைவுற்ற போது பிராயச்சித்த அபிடேகத்தைச் செய்வித்து மூலமூர்த்தியை இருப்பில் ஏற்றி பூஜை களைத் தடையில்லாமல் நடைபெறச் செய்தனர். 1948ம் ஆண்டில் டாக்ரர் ச. அ. வெற்றி வேலு அவர்களால் செய்யப்பட்ட கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடைபெற வழிவகுத்தார். தூபியைப் புதிதாக அமைப்பித்துச் சிற்பங்களை சிறப்பாக அமையச் செய்து ஆலயத்தைப் புனரமைத்தார். 40 ஆண்டுகளாக இக் கோவிலின் சிறந்த நிர்வாகியாகக் கடமையாற்றி யுள்ளார்.

## திரு. மா. சம்பந்தர் மறைவு (10-12-1982)

1945ம் ஆண்டு நியமிக்கப்பட்ட மூன்று தர்மகர்த்தாக்களுள் ஒருவர் - இக்கோவிலின் பூஜைகள் தடையின்றி நடைபெறுவதற்கு பூநகரியிலுள்ள வயல்களை மேற்பார்வை செய்து குத்தகைக்காரர்களிடம் நெல்லை அறவாக்கி கோவிலுக்கு அனுப்பிவைக்கும் பொறுப்பை இறக்கும்வரை செய்து வந்தவர். 37 ஆண்டுகளாக ஆலயப்பணி புரிந்துள்ளார்.

இவரின் சேவையால் தான் கோவில் பூஜைகள் கிரமமாக நடைபெறக் கூடியதாக இருந்தது. இவரின் சேவைகள் என்றும் நினைவுக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டர் ச. அ. வெற்றிவேலு - மறைவு (15-10-85)

மேற்படி ஆலய பரிபாலனசபையின் தலைவராக 1954ம் ஆண்டில் தெரிவுசெய்யப் பட்டார்- 1948ம் ஆண்டில் கோவிலில் கும்பாபிஷேகத்தைச் செய்தவர்- அர்ச்சகரின் வீட்டைக் கட்டுவதற்கு பேருதவி புரிந்தவர். 1979ம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபி ஷேகத்துக்கும் நன்கொடை அளித்தவர். மானம்பூத் திருவிழாவை பல காலம் சிறப்பாகச் செய்து வந்தவர். மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயலாற்றினுல்தான் கோயிலைச் சிறப்பாக நடத்த முடியுமென்பதை மக்களுக்கு விளக்கி, பிரிவினைகள் பிளவுகள் ஏற்படாமல், சுயநலம், பதவிவேட்கை இவற்றை எதிர்பாராது எல்லோரும் ஆலய முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டுமென்னும் கருத்தினை நிலைநிறுத்தி தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத சிறந்த தலைவராக இருந்து நிர்வாகத்தை ஒழுங்காக நடைபெறச் செய்தவர். 21 வருட காலமாக பரிபாலன சபையின் தலைவராகக் கடமையாற்றியவர். அமைதியாகப் பணி புரிந்தவர். மக்களுக்கு வைத்திய தொழிலால் மகத்தான சேவைபுரிந்தவர்.

## திரு. தி. பாலசுப்பிரமணியம் - மறைவு (26-1-86)

மேற்படி ஆலயத்தின் செயலாளராக 5-6-83இல் நடைபெற்ற மகாசபைப் பொதுக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர். ஆலயம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஓர் யாப்பு தயாரிப்பதற்கென தெரிவு செய்யப்பட்ட ஏழுபேர் கொண்ட குழுவில் ஒருவராக இருந்து எல்லோராலும் ஏற்கக்கூடியதான யாப்பை வகுப்பதற்கு உதவிபுரிந்தவர்.

கடமையுணர்சியுடன் மாணவர்கட்கு அறிவூட்டிய ஆசிரியர்.

## திரு. சோ. லோகேஸ்வரன் - மறைவு (15-10-87)

சிறந்த சட்டத்தரணியாக விளங்கியவர்- பேச்சு வல்லமை பெற்ற வாதாடுதலில் சிறந்த சட்டத்தரணியெனும் புகழ் பெற்றவர்- ஆலய நிர்வாக சபையில் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டவர்- தந்தையார் சோமசுந்தர உடையார் மறைந்தபின் புதிய நிர்வாகம் அமைக்கும்வரை கோவிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர். பிள்ளையாரில் விசுவாசமும் அன்பும் பக்தியுமுடையவராய் விளங்கியவர். ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி, நவ ராத்திரி விழாக்களுக்கு அநுபவமிக்க பிராமணோத்தமர்களை வரவழைத்து அதிசிறப்புப் பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்களையும் வருவித்து விழாக்களைச் சிறப்பாக நடை பெறச் செய்தவர். ஆலய முன்னேற்றத்துக்காக அயராதுழைத்தவர். பலகாலம் மிகச்சிறப்பாக மானம்பூத் திருவிழாவைச் செய்து வந்தவர். இவரின் அகால மரணம் ஆலயத்திற்கு பெரும் நஷ்டமாகும்.

## திரு. ச. அ. நல்லையா -

சிறந்த சட்டத்தரணியாக விளங்கியவர். அநுபவமிக்க, வயதில் முதிர்ந்த நிர்வாகசபை அங்கத்தவராய் விளங்கியவர். பல ஆலோசனைகளையும் வழங்கி ஆலயத்தின் முன்னேற்றத் துக்காக உழைத்தவர்.

## திரு. கனகசபை திருஞானசம்பந்தர் - மறைவு (8-11-87)

காணி அதிகாரியாகக் கடமையாற்றியவர். ஆலயத்தின் தர்மகர்த்தாவாக விளங்கிய திரு. கனகசபை (கிளாக்கர்) அவர்களின் சிரேஷ்ட புத்திரன். சிவநெறி வழுவாது தவ நெறியைப் போற்றி வாழ்ந்தவர். இறைவழிபாட்டை என்றும் மறவாதவர். நல்லூர் முருகனிலும் கொழும்புத்துறைப் பிள்ளையாரிலும் மிகவும் பற்றுடையவராய் விளங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணையில் வசித்தபோதிலும் தனது பிறப்பிடத்தையும் பிள்ளையார் கோவிலையும் என்றும் மறவாதவர். ஆலயத்தில், அமைதியும், சாந்தியும் நிலைபெற வேண்டுமென்பதை வலியுறுத்தித், தலைவராகவிருந்தபோதிலும் பதவியாசையில்லாமல் மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை மதித்து நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தியவர். நடேசப் பெருமானுக்கு வருடத்தில் ஆறு அபிடேகங்களைக் கிரமமாக நடைபெற வழிவகுத்தவர். வசந்த மண்டபத்தில் மேடை அமைத்து எழுந்தருளிகளை வீற்றிருக்கச் செய்து சிறப்பாக விழாக்கள் நடைபெற வழிவகுத்தவர்.

ஆலயம் சீர்குலைவுற்றபோது மக்கள் கவலையுடனிருப்பதைக் கண்டு உடனே பிராயச்சித்த அபிடேகத்தைச் செய்வித்து மூலமூர்த்தியை இருப்பிடத்தில் மீண்டும் வைப்பித்து நித்திய பூஜைகள் தடையின்றி நடைபெறச் செய்தவர். குத்தகைக்காரர்கள் குத்தகைப் பணத்தைக் கிரமமாகக் கட்ட வேண்டுமென வற்புறுத்தி ஓரளவுக்கு நிலைமையைச் சீராக்கியவர். இவரின் அகாலமரணம் ஆலயத்துக்குப் பேரிழப்பாகும்.

## திரு. சம்பந்தர் திருநாவுக்கரசு - மறைவு (7-8-1988)

1945ம் ஆண்டில் தர்மகர்த்தாக்கள் தெரிவுசெய்யப்பட்ட மகாசபைக் கூட்டத்தில் முதலாவது செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டவர். தர்மகர்த்தாக்களுடன் ஒத்துழைத்து 1949ம் ஆண்டுவரை செயலாளராகக் கடமை ஆற்றியவர். தவயோகச் செல்வரை வழிபட்டு வாழ்ந்தவர். வர்த்தக வங்கியில் சிறுப்பராகப் பணிபுரிந்தவர்.

## திரு. செ. துரைராஜசிங்கம்

பன்முறை ஆலய பரிபாலனசபையில் உப-தலைவராகக் கடமையாற்றியவர். நிர்வாகத்தில் மிகப் பழைய அங்கத்தவர். 1983ம் ஆண்டு நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் உப-தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர். தர்மகர்த்தாக்கள் சபையினை நீக்கி நிர்வாகத்தில் பலரும் பங்கெடுக்க வேண்டுமென விரும்பியவர்- நிர்வாகத்தைப் பரவலாக்கும் நோக்குடன் சிறந்த யாப்பினை வகுத்துக்கொடுத்தவர். சிறந்த திட்டங்களைத் தீட்டும் வல்லுனராய் விளங்கியவர். காணி அதிகாரியாகக் கடமை புரிந்தவர்.

மறைந்த நிர்வாகிகளின் சேவைகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து எமது தேவஸ்தானத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அநுதாபங்களையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

— பரிபாலனசபை

---

# எதிர்காலத்தில் ஆலயத்தில் செய்யப்பட வேண்டிய பணிகள்

1. கோவிலின் வடக்கு, மேற்கு மதில் சுவர்களை பின்தள்ளி புதிய மதில் சுவர்களை அமைத்தல்.
2. முன்வாசலுக்கு முழுமையாக கேற் அமைத்தல்.
3. ஏனைய மண்டபங்களைக் கட்டுதல்.
4. சித்திரத்தேர் ஒன்று அமைக்கும் வரை ஒரு கட்டுத்தேரை கட்டுதல்.
5. தீர்த்தக்கேணி ஒன்றினை வெட்டிக் கட்டுதல்.
6. வாகனங்களை மேலும் செய்வித்தல் - வாகனசாலையை விஸ்தரித்தல்
7. அர்ச்சகரின் வீட்டுக்கு அருகே இரண்டு அறைகள் கொண்ட வீடொன்றைக் குருக்கள்மார் வந்து தங்குவதற்காக அமைத்தல்
8. சித்திரத்தேர் ஒன்றினை உருவாக்கல்.
9. இராஜகோபுரம் அமைத்தல்.
10. ஆலயத்தில் அலுவலகம் ஒன்றை அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலய விசேட தினங்கள்

**சித்திரை**

1. சதுர்த்தி
   திரு. சோ. வரதராசா சர்மா
2. சித்ரகுப்த அபிஷேகம்
   திரு. ச. தங்கராசா
3. சித்ரா பூரணை அபிஷேகம்
   திரு. கந்தசாமி செந்தில்குமரன்

**வைகாசி**

1. சதுர்த்தி
   திரு. பொ. கனகரெத்தினம்

**ஆனி**

1. சதுர்த்தி
   திருமதி ஞா. சிவப்பிரகாசம்
2. ஆனி உத்தரம் (நடேசரபிஷேகம்)
   திரு. கு. குருநாதபிள்ளை

**ஆடி**

1. சதுர்த்தி
   திரு. சி. வரதராசா

**ஆவணி**

1. விநாயக சதுர்த்தி
   திரு. கந்தசாமி செந்தில்குமரன்
2. நடேசரபிஷேகம்
   திரு. க. இராஜசிங்கம்
3. மணவாளக் கோலம்
   திரு. மகேஸ்வரன் ராகவன்

**புரட்டாதி**

1. சதுர்த்தி
   திரு. சி. நவரட்ணராசா
2. நடேசரபிஷேகம்
   திரு. யோ. சிவகுமார்
3. நவராத்திரி
   1. திரு. சோ. சிவலோகநாதன்
   2. திருமதி ஞா. சிவப்பிரகாசம்
   3. திரு. சி. இராசநாயகம்
   4. திருமதி. கா. சோமசுந்தரம்
   5. திரு. சோ. சிவபாலசிங்கம்
   6. திரு. கந்தசாமி செந்தில்குமரன்
   7. திரு. க. இராசேந்திரம்
   8. திருமதி மு. சின்னத்துரை
   9. திரு. பொ. சண்முகநாதன்
   10. திருமதி அ. லோகேஸ்வரன் (மானம்பு)
4. சந்திரகும்பத் திருவிழா
   இந்து மகா வித்தியாலய
   ஆசிரிய மாணவர்கள்

**ஐப்பசி**

1. சதுர்த்தி
   திரு. கு. நடராசா
2. தீபாவளி அபிஷேகம்
   செல்வி வே. தனலட்சுமி

**கார்த்திகை**

1. சோமவாரம்
   திரு. து. நவரத்தினம்
   திரு. பாலசுப்பிரமணியம்
   திருமதி க. மகாதேவா
   திரு. கெங்காதரம்
   திருமதி அ. லோகேஸ்வரன்
2. விநாயக விரத அபிஷேகங்கள்
   திருமதி துரைராசசிங்கம்
   திருமதி செ. பாலகிருஷ்ணன்
   திரு. ச. தங்கராசா
   திரு. க. இராஜலிங்கம்
   திருமதி யோகாம்பிகை
   திரு. மு. கனகசபை
   திரு. சு. பாலசிங்கம்
   திரு. செ. கந்தசாமி
   திருமதி த. திடவீரசிங்கம்
   திரு. நா. தெய்வேந்திரம்
   திருமதி தி. மகேஸ்வரி
   திரு. க. சிவயோகேஸ்வரன்
   திருமதி வி. குலநாயகம்
   திரு. ந. வி. சரவணமுத்து
   திரு. கெங்காதரம்
   திருமதி க. வைத்தியநாதன்
   திரு. மயில்வாகனம்
   திருமதி மா. வீரசிங்கம்
   திருமதி நவரெத்தினம்
   திரு. கந்தசாமி செந்தில் குமரன்
   (பெருங்கதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி

1. சதுர்த்தி
   திருமதி. அ. மதனசேகரம்
2. திருவெம்பாவை
   திரு. த. திடவீரசிங்கம்
   திருமதி. V. சிவகுருநாதன்
   திருமதி க. மகாதேவா
   திருமதி ந. பாலேந்திரா
   திரு. பொ. சண்முகநாதன்
   திரு. க. இராசேந்திரம்
   திரு. க. சிவயோகேஸ்வரன்
   திரு. க. இராஜசிங்கம்
   திரு. பொ. கனகரெத்தினம்
3. திருவாதிரை
   திரு. யோ. சிவகுமார்

தை

1. சதுர்த்தி
   திரு. த. இராசேந்திரம்

மாசி

1. சதுர்த்தி
   திரு. து. சிவகுருநாதன்
2. சிவராத்திரி அபிஷேகம்
   திருமதி செகராசசிங்கம்
3. நான்கு ஜாமப் பூசை
   சனசமூக நிலையம்

பங்குனி

1. சதுர்த்தி
   திருமதி அ. லோகேஸ்வரன்

## திருக்கோவில் வழிபாடு

சைவ ஆலயங்கட்கு செல்லும் போது நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து, மது, மாமிசம் அற்ற நிலையில், வீபூதி தரித்து சிவப்பொலிவுடன் செல்ல வேண்டும்: ஆண்கள் மேலாடை அணியலாகாது. பாத அணிகளை அகற்றி, பாதங்களைக் கழுவி சிவசிவ என்று நினைத்துக் கொண்டு செல்ல வேண்டும். கோபுர வாயிலை அண்மியதும் நான், எனது என்ற ஆணவ நிலை இல்லாது செல்ல வேண்டும். உட்பிரகாரத்தில் சிரித்தல், எச்சில், மூக்குநீர் சிந்துதல், வீண்வார்த்தை பேசுதலாகாது. புகைத்தலாகாது. எம் பெருமான் ஆலயத்தை விட்டு நீங்கும்வரை சிவ சிந்தனையுடனேயே இருக்கவேண்டும்.

— நாவலர்

''சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே'' — திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது  நன்றி

எமது ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெறும் நாளில் வருகைதந்து கிரியைகளைச் சிறப்புற நடாத்தி இக்கோவில் எதிர்காலத்தில் மிகச் சிறப்புடன் முன்னேற்றமடையு மென்பதில் ஐயமில்லையெனக்கூறி ஆசிகள் பல வழங்கிய கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும்,

ஆலயத்தில் நிர்மாணிக்கப்படவேண்டிய கட்டடங்கள், ஆலயங்கள், சாஸ்திர விதிகளுக் கமைய நிறுவுவதற்கு எமக்கு ஆலோசனைகள் நல்கிய பேராசிரியர் பிரம்மஸ்ரீ க. கைலாயநாதக் குருக்கள் (யாழ். பல்கலைக்கழகம்) அவர்கட்கும் நியாய சிரோன்மணி, வித்தியாசாகரம் பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும்,

கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்திய பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாதக் குருக்கள் (ஊரெழு), சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், சிவ ஸ்ரீ க. கேதீஸ்வரக் குருக்கள் (திருக்கேதீஸ்வரம்), சைவசித்தாந்த சிரோன்மணி சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், புன்னாலைக்கட்டுவன், சிவஸ்ரீ தா. மகாதேவாக் குருக்கள் (தர்ம சாஸ்தா குருகுல அதிபர் இணுவில்) முதலியோருக்கும் ஏனைய உதவிக் குருமணிகட்கும்,

கும்பாபிஷேகத் தினத்தன்று ஆசியுரை, வாழ்த்துரை, சிறப்புரை வழங்கிய நல்லை ஞான சம்பந்தர் ஆதீனம் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி நா. முத்தையா, நல்லூர் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்கட்கும்,

மஹோற்சவத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்த பிரம்மஸ்ரீ குமாரகுரு சோமசுந்தரக் குருக்கள் (மட்டுவில் வடக்கு) அவர்கட்கும், உதவிக் குருமணிகட்கும்,

மஹோற்சவ காலத்தில் பன்முறை வருகை தந்து கிரியைகளைச் சிறப்பாக நடைபெற ஆலோசனைகள் வழங்கி எமக்கு வேண்டிய ஊக்கமும் ஆக்கமுமளித்த இணுவில் ஸ்ரீ தா. மகாதேவாக் குருக்கள் அவர்கட்கும்,

சாஸ்திர விதிப்படி ஆலயம் அமைப்பதில் அநுபவமும் தேர்ச்சியும் பெற்று வைரவர் கோவில், யாகசாலை, சண்டேசுரர் கோவில், நவக்கிரக ஆலயம் முதலியவற்றை அழகுற அமைத்துத்தந்த சிற்பாசாரியர்கள் அராலி தெற்கு திருவாளர்கள் நா. கோபாலசிங்கம், கோபாலரத்தினம் அவர்கட்கும், அவர்கள் குழுவினர்களுக்கும்,

விழாக் காலங்களில் மங்கள இசை பொழிந்த பிரபல்யம் வாய்ந்த திரு. N. K. பத்மநாதன் குழுவினர், திரு. K. M. பஞ்சாபிகேசன் குழுவினர், திரு. S. ஜெகதீஸ்வரன் குழுவினர், மணியம் சகோதரர் குழுவினர்க்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு வேண்டிய உதவிகளை முகமலர்ச்சியுடன் செய்து கும்பாபிஷேகத்திலும் பங்கு கொண்டு கடமையாற்றிய பழனியாண்டவர் கோவில் குருக்கள் சிவஸ்ரீ தி. சங்கரராஜக் குருக்களுக்கும்,

வேண்டிய பணிகளையெல்லாம் கிரமம் தவறாது உரிய காலங்களில் சிறப்பாக நடைபெறப் பணிபுரிந்த எமது ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சோ. லோகேஸ்வர சர்மா அவர்கட்கும், பிரம்மஸ்ரீ. சோ. நடராஜசர்மா அவர்கட்கும்,

விழாக் காலங்களில் ஆலயத்தைச் சுற்றி மின் விளக்குகள் அமைத்தும் கோவில் வீதிகளையும் சுற்றாடல்களையும் சுத்தமாக வைத்திருப்பதற்கும் உதவி புரிந்த யாழ். மாநகர சபை உத்தியோகஸ்தர்கட்கும், ஊழியர்கட்கும்,

கும்பாபிஷேகப் பத்திரிகைகள் மகோற்சவப் பத்திரிகைகள் முதலியவற்றை உரிய காலத்தில் அச்சிட்டுதவிய விஜயா அச்சக உரிமையாளருக்கும், உதவியாளர்கட்கும்,

விழாக்காலத்தில் அல்லும் பகலும் அயராதுழைத்துச், சிரமதானம் மூலம் பல பணிகளையும் சிறப்புறச் செய்து தொண்டுகள் பல புரிந்த எமது இளைஞர்கட்கும்,

நாம் எடுத்த பணிகளையெல்லாம் இலகுவாகவும் சிறப்பாகவும் முற்றுப்பெறுவதற்குப் பெரு நிதியளித்த உள்ளூர், வெளியூர் அடியார்கள் அன்பர்கள் யாவருக்கும்,

எமக்குத் தேவைப்பட்ட உதவிகள் பலவற்றையும் மனமுவந்து நல்கிய அரியாலை பிரப்பங்குளம் மகா மாரியம்மன் ஆலய நிர்வாகஸ்தர்கட்கும், அருகாமையிலுள்ள ஏனைய ஆலயங்களின் நிர்வாகஸ்தர்கட்கும் குருமணிகட்கும்,

தேர்த்திருவிழாச் சிறப்பு மலரை வெளியிட்டுதவிய ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனத்தாருக்கும், அம்மலரைச் சிறப்பிப்பதற்கு விளம்பரங்கள் நல்கிய ஸ்தாபனங்கட்கும்,

ஆலயத் திருப்பணிகளின் வரவு செலவுக் கணக்குகளை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்த கணக்காய்வாளர் திரு. N. கருணை ஆனந்தன் அவர்கட்கும்,

மிகக் குறுகிய காலத்தில் எமது வரவு செலவுக் கணக்கறிக்கைகளை சிறப்பாக அச்சிட்டு உதவிய சாந்தி அச்சக உரிமையாளர் அவர்களுக்கும், அவர் தம் அலுவலர்களுக்கும்,

இன்னும் பெயர் கூற மறந்த பெரியோர்கள், அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும், விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற வேண்டுமெனப் பிரார்த்தித்து எமது நெஞ்சத்து ஆழத்தில் நிறைந்திருக்கும் நீடித்த உளம் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

வணக்கம்!

இங்ஙனம்
**ஆலய பரிபாலன சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை
# ஸ்ரீ பழனி ஆண்டவர் கோவில் ஆதீன
# அர்ச்சகர் மறைவு (25-6-1989)

கொழும்புத்துறை பழனியாண்டவர் கோவிலின் முன்னாள் அர்ச்சகரும் மகாவித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியருமான பிரம்மஸ்ரீ தி. ச. தியாகராஜ ஐயர் அவர்கள் தமது 80 ஆவது வயதில் அண்மையில் சிவபதமடைந்தார். அன்பும் பண்பும் மிக்க ஆசாரசீலர்.

1934ம் ஆண்டில் கொழும்புத்துறைக்கு வந்து பழனியாண்டவர் கோவில் அர்ச்சகராகவும் மகாவித்தியாலய ஆசிரியராகவும் கடமை ஏற்றவர்.

தனது கடமைகளைக் கண்ணியமாகவும், நேர்மையாகவும் செய்யும் ஆற்றல் படைத்தவராக விளங்கியவர். 1981ம் ஆண்டில் பழனியாண்டவர் கோவிலின் தூபிகளைப் புனரமைத்து, கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற வழிவகுத்தவர்.

இவரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

— பரிபாலனசபை

## பாராட்டுகின்றோம்

எமது பரிபாலன சபையின் தலைவரும் பழனி ஆண்டவர் கோவிலின் முகாமையாளருமான திரு. ச. செல்வராசா அவர்கள் ஐம்பது ஆண்டுகளாக ஆற்றிய சமூக சமயத் தொண்டுகளைப் பாராட்டு முகமாக சைவபரிபாலன சபையார் அன்னாருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். நாமும் அவருக்கு எமது நிர்வாகசபை சார்பாக எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org